S. M. Fernando
OPTICIANS
Sight Tested Prescriptions Accurately Dispensed.
580, Hospital Road,
Near Bank of Ceylon,
Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் பரிசோதித்த கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்.
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 26 புதன்கிழமை (08-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 133

# கறுப்புப் பூனைகள் விவகாரம் நாடாளுமன்றுக்கு வருகிறது!

## அரசியல் நெருக்கடிக்கு அறிகுறி

கொழும்பு, ஏப்ரல் 8

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி எம். பிக்களின் ஏற்பாட்டில் இயங்கியதாகக் கூறப்படும் கறுப்புப் பூனைகள் படையினரின் நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்த எதிர்க்கட்சிகள் முஸ்தீபு செய்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னணிப் பிரமுகர்கள் பலர் கறுப்புப் பூனைகளினால் படுகொலை செய்யப்பட்டனர் என்று முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல வெளியிட்ட குற்றச்சாட்டு, தெற்கில் பெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்கும் சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

கறுப்புப் பூனைகள் விவகாரம் குறித்து நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சி பதில் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கோரியிருக்கிறார்.

கறுப்புப் பூனைகள் பற்றிய பல்வேறு இரகசியங்களை நாடாளுமன்ற விவாதம் மூலம் அம்பலப்படுத்த முடியும் என பிரதான எதிர்க்கட்சியான

[4 ஆம் பக்கம் பார்க்க]

### உடுகம்பொலவின் குற்றச்சாட்டுகளை

## விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு நியமியுங்கள்!

### அநுரா பண்டாரநாயக்கா கோரிக்கை

கொழும்பு, ஏப். 8

முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல அரசுக்கு எதிராகத் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய கட்சி சார்பற்ற— மூன்று நீதிபதிகளைக் கொண்ட—தனியான நீதி விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்என்று எதிர்க்கட்சி பதில் தலைவரும் ஸ்ரீ ல சு. கட்சியின் தேசிய அமைப்பாளருமான அநுரா பண்டாரநாயக்கா கோரியிருக்கிறார்.

சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் பலரைக் கொலை செய்ய ஆளும் கட்சியினர் கொலைப் படை ஒன்றை அமைத்துச் செயற்பட்டனர் என்பது உட்பட உடுகம்பொல தெரிவித்த அனைத்து குற்றச்சாட்டுகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

உடுகம்பொல அரசுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர். முக்கிய உயர் பதவியை வகித்தவர். எனவே அவர் தெரிவித்துள்ள குற்றச் சாட்டுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை; மிகவும் கவனமாக ஆராயப்பட வேண்டியவை.

—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-எ-10)

## சர்வதேச மன்னிப்புச் சபை விசாரணை செய்ய வேண்டும்

### மகிந்த ராஜபக்ஸ வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 8

முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் உடுகம்பொல தெரிவித்த குற்றச்சாட்டுகள் குறித்து சுதந்திரமான விசாரணை எதனையும் அரசாங்கம் நடத்தும் என்பது சந்தேகமே. ஆகையினால் லண்டனில் உள்ள சர்வதேச மன்னிப்புச் சபையும் சர்வதேச நீதிக்கழகமும் இணைந்து இக்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தவேண்டும்.

— இவ்வாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மற்றொரு தலைவரும், அடிப்படை மனித உரிமைகள் விடயத்தில் அதிகம் அக்கறை காட்டுபவருமான மகிந்த ராஜபக்ஸ தெரிவித்தார்.

உடுகம்பொல தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், தற்போதைய அரசுத் தலைவர் தொடர்ந்து பதவியில் நீடிக்க எந்தவித நியாயமுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(உ-எ-10)

### சி. ஐ. டியினர் முன் ஆஜராக உடுகம்பொலவுக்கு பணிப்பு

சட்டத்தரணி லியனாராய்ச்சி கொலையுண்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்காக பிரேமதாச உடுகம்பொல நாளை மறுதினம் இரகசியப் பொலீஸாரின் முன் ஆஜராக வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரகசியப் பொலீஸாரின் முன்னர் நேற்று முன்தினம் அவர் ஆஜராக வேண்டும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் ஆஜராகவில்லை.

உடுகம்பொல தலைமறைவாகியிருப்பதாக செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே.

[உ-எ-10]

### முச்சந்தி முரளி



அப்ப... எதிரணியின்ரை வெறும் வாய்க்கு மெல்ல அவல் கிடைச்ச மாதிரி எண்டு சொல்லுங்கோ...!

## ரஞ்சன் கொலை பற்றி புதிய சந்தேகம்!

### உடுகம்பொல கிளப்புகிறார்

கொழும்பு, ஏப். 8

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவை உண்மையில் யார் கொன்றது என்பது குறித்து புதிய சந்தேகங்களை முன்னாள் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல எழுப்பியிருக்கிறார்.

திரு. விஜேரத்தினாவை விடுதலைப் புலிகள்தான் கொன்றனர் என்று அரசாங்கம் கூறிவருகின்றபோதிலும்—

விஜேரத்தினா படுகொலை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் அகதி முகாம்களில் தாக்குதல்கள் அதிகரிப்பு!

### 3 மாதங்களில் 600 சம்பவங்கள்

கொழும்பு, ஏப். 8

இவ்வாண்டு முதல் மூன்று மாதங்களில், ஜேர்மனியில் வெளிநாடுகளைச் சேர்ந்த அகதிகள் தங்கியிருக்கும் முகாம்கள் மீது 600க்கு அதிகமான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு இதே காலத்தில் இடம்பெற்ற தாக்குதல்களுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டு இத்தாக்குதல் சம்பவங்கள் 4 மடங்காக அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

[இ-எ]

### காடு அழிப்பை நிறுத்துவதற்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 8

வன்னிப் பகுதியில் விறகுக்காக காடுகளை வெட்டவேண்டாம்.

விடுதலைப் புலிகளின் வன்னிப் பிராந்திய அரசியல் பிரிவு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இயற்கை வளங்களான காடுகளை அழிப்பதால், மழை இல்லாது போகும் நிலை ஏற்படும். இதனால் விவசாயம் பாதிப்புறும். ஆகவே விறகுக்காக காடுகளை அழிப்பதை நிறுத்துங்கள். —இவ்வாறு அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[உ-3]

### கண்ணிக்கு ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 8

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிலக்கண்ணி வெடிச்சம்பவம் ஒன்றில் ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் காயமடைந்தனர்.

கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

பொதுமக்கள் பயணம் செய்த லொறி ஒன்றே கெமுணுபுரவுக்கும் மொறவெவவுக்கும் இடையில் நிலக்கண்ணியில் சிக்கிச் சிதறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-த]

### வீடு திருத்த கடன் உதவி

யாழ்ப்பாணம், ஏப். 8

உள்ளூர் மூலப்பொருள்களைக் கொண்டு வீடமைக்க, வீடுதிருத்த தேசிய வீடமைப்பு அதிகார சபை கடன் வழங்கவிருக்கிறது.

சிமெந்து போன்ற கட்டடப் பொருள்கள் இல்லாத காரணத்தால் கடன் வழங்கும் நடவடிக்கைகளை தேசிய வீடமைப்பு அதிகார சபை நிறுத்தியிருந்தது.

தற்போது உள்ளூர் மூலப் பொருள்களான களிமண், சுண்ணாம்பு ஆகியவற்றைக் கொண்டு வீடுதிருத்தவும், வீடமைக்கவும் கடன் வழங்கும் திட்டத்தை அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது.

## ஊர்காவற்றுறையில் 500பேரே; அவர்களும் யாழ் வரவிருப்பம்!

### இடிந்த கட்டடங்களும் வெற்று வயல்களுமே இப்போது அங்கு மிச்சம்

கொழும்பு, ஏப். 8

ஸ்ரீலங்கா இராணுவம் நிலைகொண்டுள்ள ஊர்காவற்றுறைப் பகுதியில் சுமார் 500 மக்கள் மட்டுமே தங்கியுள்ளனர். அவர்களில் அனேகர் வயோதிபர்கள்.

இப்போது ஊர்காவற்றுறையில் தங்கியுள்ள மக்கள் யாழ்ப்பாணம் வருவதற்கே விரும்புகிறார்கள்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் கண்ணுக்கு எட்டிய தூரமெல்லாம் இடிந்த கட்டடங்களும், வெறும் வயல் வெளிகளுமே காட்சி தருகின்றன.

கடந்த திங்கட்கிழமை அங்கு நேரில் சென்று பார்த்த பி. பி. சி. செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் இத்தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கம் ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் பயணம் ஒன்றில் திரு. மொறிஸ் அங்கு போயிருந்தார்.

அங்கு கண்டவற்றை அவர் பின்வருமாறு விவரித்துள்ளார் :-

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் விரைவில் வாழ்க்கை நிலை வழமைக்குத் திரும்பிவிடுமென மூத்த இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஊர்காவற்றுறையில் மருத்துவமனை, பொலீஸ் நிலையம், அஞ்சல் அலுவலகம் என்பன புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

ஆனால் வேடிக்கை என்னவென்றால், இந்தப் பொதுச் சேவைகளை அனுபவிக்கவும் பயன்படுத்தவும் அங்கு மக்கள் இல்லை. ஊர்காவற்றுறை வெறிச்சோடிக் காணப்படுகிறது. கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் இடிந்த கட்டடங்களும் பயிர் செய்யப்படாத வெற்று வயல் வெளிகளும் தான் காட்சி தருகின்றன.

ஊர்காவற்றுறையின் மக்கள் தொகை சுமார் 74 ஆயிரம். ஆனால் இராணுவம்

(3ஆம் பக்கம் பார்க்க)

### ஜி.சி.ஈ. (சாதாரண) தரம்:

## பரீட்சை முடிவுகள் கிடைப்பதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஏப். 8

1991 டிசம்பரில் நடைபெற்ற ஜி. சி. ஈ. [சாதாரண] தரப் பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணம் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப பரீட்சை முடிவுகள் கடந்த திங்கட்கிழமை விமான மூலம் பலாலிக்கு அனுப்பப்படும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்திருந்தார்.

ஆனால் நேற்று மாலை வரை பரீட்சை முடிவுகள் பலாலிக்கு வந்ததாகத் தமக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்று செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் பரீட்சை முடிவுகள் கடந்த வெள்ளிக்கிழமையே வெளிவந்துவிட்டன. இங்குள்ள மாணவர்கள் பரீட்சை முடிவுகள் எப்போது வரும் என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். [அ-3]

## வடக்கில் அரிசி, மா தேக்கம்; சீனி, தே. எண்ணை தேவை

யாழ். மாவட்டத்தில் அரிசி, மா போன்றவை தேங்கிக்கிடப்பதால் சீனி, தேங்காய் எண்ணெய் போன்ற பொருள்களைக் கப்பலில் அனுப்புமாறு புனர்வாழ்வு அமைச்சுக்கு யாழ். செயலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கப்பலில் கொண்டுவரப்பட்ட நாலாயிரத்து 776 மெற்றிக் தொன் அரிசியும், மூவாயிரத்து 831 மெற்றிக் தொன் மாவும், 404 மெற்றிக் தொன் பயறும் செயலக களஞ்சியங்களில் தேங்கிக்கிடக்கின்றன.

இவை ப. நோ. கூ. சங்கங்களில் போதிய அளவு கையிருப்பில் இருப்பதாலும்—

வெளி மாவட்டங்களில் இருந்து கூடுதலான நெல் எடுத்து வரப்பட்டதாலும்—

கொழும்பில் இருந்து வந்த அரிசி, மா போன்றவை தேங்கிக் கிடப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-3]

### வவுனியா விமானத் தளத்துக்கு

## சுவீகரிக்கப்பட்ட காணிகளில் ஒரு பகுதி மீள ஒப்படைப்பு

வவுனியா, ஏப். 8

வவுனியா தச்சன்குளம் விமான தளத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் கடந்த சனிக்கிழமை திருப்பி ஒப்படைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்தின் பாவனைக்கென 6 ஏக்கர் நிலமும், வவுனியா நகரில் சேகரிக்கப்படும் குப்பை கூளங்களைப் போட்டு எரிப்பதற்காக 2 ஏக்கர் காணியும் அதிகாரபூர்வமாக திருப்பி ஒப்படைக்கப்பட்டன,

ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட காணியில் அமைந்துள்ள சத்தோஸிக்க மயானத்தை இனிமேல் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. [உ-3]

### மே நடுப்பகுதி வரை மழை இராது

கொழும்பு, ஏப். 8

மே மாத நடுப்பகுதி வரை நாட்டில் பெருமழைக்கு இடமில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

நாட்டில் தற்போது நிலவும் கால நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்றும் —

மே மாத நடுப் பகுதியில் தென்மேற்கு பருவகால நிலை ஆரம்பமாகும் வரை இதே நிலை தொடரும் என்றும் —

வளி மண்டலவியல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [இ-எ]

## பலாலி ஷெல்லினால் நால்வர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஏப். 8

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் ஒரு மணியளவில் — சுமார் அரை மணி நேரம் — குடியிருப்புகளை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் மூவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. தெல்லிப்பளை, மல்லாகம், ஏழாலை, குப்பிளான் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

அதே தினம் இரவு பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் [illegible] விழுந்து வெடித்தன.

[illegible] மணியளவில் — தெல்லிப்பளைப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் இராசேஸ்வரன்

[3ஆம் பக்கம் பார்க்க]

### தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், ஏப். 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் செட்டிப்பாளையம் பகுதியைக் கடந்த வியாழக்கிழமை சுற்றிவளைத்த படையினர் அங்கு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் மரணமானார்.

தேவசகாயம் சந்திரலிங்கம் என்பவரே மரணமானார் என்று தெரியவந்தது.

[உ-த-3]

## எதிர்க்கட்சித் தூதுக் குழு நாளை மன்னார் விஜயம்

கொழும்பு, ஏப் 8

அனைத்து எதிர்க்கட்சிகளையும் சேர்ந்த குழு ஒன்று நாளை 9 ஆம் திகதி மன்னார் செல்லவிருக்கின்றது.

ஒவ்வொரு எதிர்க்கட்சியில் இருந்தும் இரண்டு பிரதிநிதிகள் இக்குழுவில் இடம்பெறுவர்.

புத்தளம்—கற்பிட்டி கடல் வழியாக மன்னார் செல்லும் இக்குழுவினர் மன்னார் செயலகத்தில் நடைபெறும் மாநாடு ஒன்றிலும் பங்கு பற்றுவர்.

மன்னார் நிலைவரம் பற்றி இக்குழுவினர் நேரில் ஆராய்வர். [இ-எ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்லாரை தெற்கில் உள்ள தோட்டத்துப் பிள்ளையார் கோவில் பாலை மரம் விற்பனைக்கு உண்டு. 7' உயரம். 5½' சுற்றளவு. மு. தில்லையம்பலம், அல்லாரை தெற்கு, 2ஆம் கட்டை, கச்சாய் றோட், சாவகச்சேரி. [20378]

### விற்பனையாகின்றன

New Class Work Book Year 9, Year 10, 11 கணிதப் பயிற்சி, ஆண்டு 1—5 தமிழ் மொழி அடிப்படை அறிவு செயல் நூல்கள் ஆண்டு 1—10 வரை (புதிய பதிப்புகள்) வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [4628]

### A/L வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1827]

### A/L 92 வினாத்தாள்

தற்போது நடைபெறுகின்ற G. C. E A/L - 92 விசேட பரீட்சைக்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்களின் வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை. 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி-1815]

### தேவை

சோடா மென்பானங்கள் போன்றவை தயாரிப்பதில் அனுபவமும் ஆற்றலுமுள்ளவர்கள் பகுதிநேர அல்லது முழுநேர அடிப்படையில் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். 16, மூன்றாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி/1834)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1825]

ஆண்டு 5 (1991) புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 11-4-92, 18-4-92, 23-4-92 மு. ப. 7-00, மு. ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். புதிய கல்வி நிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [20388]

### தவறிவிட்டது

6-4-92 இல் கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து குருநகருக்குச் செல்லும் வழியில் முருகேசு கணேசு இல. 630870658V தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாஜம், 201, 3ஆம் குறுக்குத் தெரு [அடைக்கல மாதா கோவில் அருகாமையில்], யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (20384)

பொன்னையா நடராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல: 373192058V 6-4-92இல் மட்டுவில் ஆலயத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அண்ணா கோப்பிக் கடை, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் [சி-1843]

### இலவச திருமண சேவை

24 வயது, மகரம் 1, செவ்வாய் 8, சுவிஸில் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. விண்ணப்பங்கள் ஏற்கப்படும். தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4606]

28 வயது, சித்திரை 1, கனடாவில் வசிக்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை. கனடா மணமகன் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் ஏற்கப்படும். தொடர்பு ஞாயிறு காலையில் மட்டும். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4617]

27 வயது, சதயம் 3, M. B. B. S Drக்கு Professional தரத்தில் மணமகன் தேவை. வெளிநாட்டு விண்ணப்பங்களும் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4619]

வயது 36, ஆயிலியம் 2. சைவ போசன ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில் மட்டும். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4620]

29 வயது, புரட்டாதி 2, B. Sc. Computer, கொழும்பில் பணிபுரியும் அழகிய பெண்ணுக்கு Professional தரத்தில் மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4622]

## அலுவலகப் பையன்கள் (பியோன்கள்)

★ உதயன் பணிமனையில் பகல், இரவு நேரங்களில் பியோன்களாகப் பணிபுரிவதற்குத் தகுதியானவர்கள்—

★ அலுவலக நேரங்களில் விண்ணப்பத்துடன் நேரில் சமுகமளிக்கவும்.

★ முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முகாமையாளர் (ஆளணி),
**உதயன் வெளியீட்டகம்,**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**92** கலை, வர்த்தகம் பிரிவு 2

DAY CLASSES (8. 00 — 3. 00)

ஆரம்பம்:- 09 — 04 — 92 8. 00 மணி

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு இரட்ணம்
கணக்கியல் — திரு. S K. பிரபாகரன்
அளவையியல் — திரு. A பிரபாகரன்

மற்றும் சகல பாடங்களும் நடைபெறும்.

மு. குறிப்பு:- எமது நிறுவனத்தில் மட்டுமே DAY - CLASSES சிறப்பாக நடைபெறுகின்றன.

(சி/1832)

## வர்த்தக வங்கி
COMMERCIAL BANK

# புத்தாண்டு பரிசுப் போட்டி முடிவுகள்

எம்மால் நடாத்தப்பட்ட மேற்படி போட்டியில் சரியான விடையளித்தவர்களில் 50 அதிர்ஷ்டசாலிகளை தேர்ந்தெடுத்துள்ளோம். பரிசு பெற்றவர்கள் புத்தாண்டு தினத்தன்று முற்பகல் 10 மணியளவில் (13 - 04 - 1992) வங்கியில் நடைபெறும் விழாவில் கலந்து பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகிறோம்.

### பரிசு பெற்றவர்களின் விவரம்

முதற் பரிசு:- கருணாகரன் தர்மகரசி
107, கனரெட்ணம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:- ஜே. றிச்சார்ட் றெனோல்ட்ஸ்
நவாலி வடக்கு, மானிப்பாய்.

மூன்றாம் பரிசு:- சின்னவீரப்பன் ஆறுமுகம்
376, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

### ● மிகுதி 47 ஆறுதல் பரிசுகளைப் பெறுவோர்:-

04. செல்லப்பா நடராசா, சிவன் கோவிலடி, வட்டு-மேற்கு, வட்டுக்கோட்டை.
05. கந்தசாமி ரூசாந்தன், C. M. S ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
06. திருமதி யோ. மகேந்திரலிங்கம், 'வேம்போலல', இணுவில் கிழக்கு, இணுவில்.
07. தம்பித்துரை நவரட்ணவேல், ஊர் எல்லை வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.
08. திருமதி ச. கலாராணி, 'ரேவதி இல்லம்', பிரதான வீதி, இளவாலை.
09. செல்லத்துரை சுரேந்திரன், கம்பன் கழகம், இல 300, நல்லூர், யாழ்ப்பாணம்.
10. சோமு நாகராஜன், 320, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
11. மகேஸ்வரி இலங்கைநாயகம், மண்டேலா புத்தகசாலை, இல. 2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.
12. சரஸ்வதி வேலாயுதம், 'துரை பேக்கரி', சூராவத்தை, சுன்னாகம்.
13. செல்வி யசியானா யேசுராஜன், 60, செ. பெனடிற் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
14. வடிவேல் சிவஞானம், பிள்ளையார் கோவிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
15. செல்வி அனெற் செல்வினி - கிறிஸ்தோப்பர் 33/21, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.
16 ஆர். புவனேந்திரன், 750, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
17. அண்ணாமலைநாதன் தங்கேஸ்வரி, 'தெய்வபதி', தென். மேற்கு, வட்டுக்கோட்டை.
18. மஞ்சுளா பரமேஸ்வரன், 'ராஜஸ்தான்', பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
19. சுகிர்தா பாலசிங்கம், கந்தரோடை, சுன்னாகம்.
20. திருமதி இராஜலக்ஷ்மி - புவனேந்திரன் 163, கோவில் வீதி, நல்லூர், யாழ்
21. தர்மினி நவரட்ணம், 131/1, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
22. த. புஸ்பமலர், 64/14, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
23. தேவலோசனி குமரவேள், 383, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.
24. கதிரித்தம்பி சுப்பிரமணியம், 'சிந்தாமணி', நீலியம்பனைப்- பிள்ளையார் கோவிலடி, மல்லாகம்.
25. செல்வன் நவரத்தினம் ஜெயரூபன், மீசாலை வடக்கு, ஊர் எல்லை வீதி, மீசாலை.
26. சுப்பிரமணியம் செல்லம்மா, கார்த்திகேசு வீதி, மீசாலை தெற்கு, மீசாலை.
27. துரைராஜசிங்கம் திருக்குமார், சேர்ச் அருகாமை (Near Church), கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
28. திருமதி நடேசகாந்தன் - ஜெகதீஸ்வரி 9, 2ஆம் குறுக்குத் தெரு, கொழும்பகம் வீதி, யாழ்ப்பாணம்.
29. செல்வி கந்தப்பு சுகந்தினி, நாவலர் பாடசாலை வீதி, கோப்பாய் தெற்கு.
30 சார்ள்ஸ் நவரட்ணம் ஷெரின்- கோமதி, புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
31. திருமதி சகுந்தலா குணரத்தினம், பிரதம தபால் அலுவலகம், யாழ்ப்பாணம்.
32. குருசுமுத்து பீற்றர், புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
33. சாந்தி அமிர்தலிங்கம், 49, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
34. எஸ். சண்முகலிங்கம், வாசிகசாலையடி, உடுப்பிட்டி
35. தேவலிங்கம் ஜெயரத்தினம், A. குலசேகரம் மே/பா, புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.
36. ஆறுமுகக் குருக்கள் சத்தியபாமா, புலவனார் ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ். நகர்.
37. இ. சரஸ்வதி, இல. 55, துர்க்கை அம்மன் - கோவிலடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
38. சபாபதிப்பிள்ளை தியாகராஜா, 'கனல்', ஒழுங்கை, மாதகல்.
39. சுப்பிரமணியம் செல்வராசா, கைதடி தெற்கு, கைதடி.
40. நடராஜா செல்வவினாயகன், துரை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
41. திருமதி யோகலக்ஷ்மி ராஜரட்ணம், உடையார் வளவு, உரும்பராய்.
42. சியாமளா துரைச்சாமி, இல. 200, நாவலர் வீதி, யாழ்.
43. வயிரவன் இராசையா - (தோரையன்), 'மடத்துக் கடவை', அல்வாய் மேற்கு, அல்வாய்.
44. குணரட்ணம் தேவிகா, 49/3, வில்வத் தெரு வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
45. திருமதி இராசாத்திப்பிள்ளை- சிவராமகிருஷ்ணன், செட்டியார் வளவு, சுன்னாகம்.
46. திருமதி சுந்தரேஸ்வரி- நவரட்ணராஜா, 'ஸ்ரீ சக்தி', யாழ் வீதி, மானிப்பாய்.
47. கணபதி சிறிதரன், கைதடி மேற்கு, கைதடி.
48. செல்வி மாலதி சிவஞானசுந்தரம், 'பழமுதிர்ச்சோலை', நீலியம்பலன, மல்லாகம்.
49. கந்தசாமி இந்திராணி, உச்சியோடை ஒழுங்கை, மானிப்பாய்.
50. ஐயாத்துரை இரத்தினமாலா, 'லக்ஷ்மி தாரகை', அல்வாய் மேற்கு, அல்வாய்.

★ எம்மை நாடுங்கள் ★ சேமியுங்கள் ★ வளருங்கள்

## வர்த்தக வங்கி

474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**உங்கள் வெற்றி எங்கள் பலம்**

[சி-1778]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

## பதவி வெற்றிடம்

பதவி: பொது முகாமையாளர் 101:3
வயதெல்லை:- 23 — 40
சம்பளத்திட்டம்:- 2305 — 3355 / 75X6 — 100X6

இத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்குப் பொருத்தமான படிகளும் வழங்கப்படும்.

விவரங்களை நேரிலோ, தபால் மூலமாகவோ காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர், போதிய முத்திரை ஒட்டப்பட்ட, சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

தலைவர்,
யாழ். மாவட்ட புடைவை நெசவாளர்- கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில்

[சி-1780]

உங்கள் நோய் தீர்க்க வாங்கும் சகலவிதமான

## மருந்து வகைகளுக்கும்

எம்மிடம் விஜயஞ்செய்யுங்கள்

## பரணி மருந்துச்சாலை

456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(4630)

# சீமாட்டி
## புதுவருட மலிவு விற்பனை

எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு!
என்றுமில்லாதவாறு விலை குறைப்பு!!
தவறாது பயன்படுத்துங்கள்!!!

★ சைனா சித்தை
★ தாறிகா வோயில் சாறி
★ உறையூர் பருத்திச் சேலைகள்
★ மாட்டின், ஜோன் கூப்பர் சேட் வகைகள்
இன்னும் பல ஐவுளி ரகங்கள்!

**சீமாட்டி ரெக்ஸ்ரைல்ஸ்,**
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(4629)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



## சற்குணநாதன் நந்தகோபன்

தாயின் மடியில்: 17—09—1969
இறைவன் பணியில்: 08—04—1987

அன்புச் செல்வமே! அருமை மகனே! மன்றாடி வேண்டி நின்றோம் மறந்திட்டான் காலதேவன். சென்றதே வருடம் ஐந்து சிலிர்க்குதே எங்கள் நெஞ்சம். புன்சிரிப்பின் புகலிடமே! போன இடம் சொல்லாயோ? ஆறாது ஆறாது நெஞ்சம், இது அழுதாலும் தீராது. நந்தகோபனென்னும் நாமம் மங்கியதோ! உன் மஞ்சம் மகனே! மீளாத்துயில் கொண்டு வருடம் ஐந்து ஓடி மறைந்தாலும், மாறாது, மறையாது ஒளி வீசும் உன்னுருவம்.

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பி தங்கை, அத்தான்மார்,
நண்பர்கள், மருமக்கள்.

இ. சற்குணநாதன் (T.A)
பிருந்தாவனம்,
மீசாலை தெற்கு,
மீசாலை.

[20326]

## உதயன்

### முதலிடம் மண்ணுக்கே வேண்டும்

கிழக்கில், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில், சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் தமிழ்க் கிராமங்கள் தொடர்ந்தும் கபளிகரம் செய்யப்பட்டு வருகின்றன. —

தமிழ்க் கிராமங்களை, தமிழ் மக்கள் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ள கிராமங்களைப் படையினர் சுற்றி வளைப்பதும், மக்களை இம்சைப்படுத்துவதும் மற்றும் இராணுவ வன்முறைகளைப் புரிவதும் தொடர்கின்றன—

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு — அம்பாறைப் பிராந்திய மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் தெரிவித்திருக்கிறார்.

கிழக்குப் பிரதேசம் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதி என்று உரிமை கொண்டாட இடம் வைக்கக் கூடாது என்பது அரசாங்கத்தினதும், சிங்களப் பேரினவாதத்தினதும் அடிப்படை நோக்கம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

அந்த நோக்கத்தை எய்துவதற்காக, தமிழர்களைத் துன்புறுத்தி அவர்களது சொந்தக் கிராமங்களில் இருந்து விரட்டிவிட்டு சிங்களக் குடியேற்றங்களை நடத்துவதில் அரசு மும்முரமாக ஈடுபட்டு வருவது ஒன்றும் புதியதல்ல.

ஆனால் யுத்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, தமிழர் மண்ணை அபகரிக்கும் நடவடிக்கையை அரசு தீவிரப்படுத்தியும், துரிதமாகச் செய்தும் வருகிறது.

யுத்தம் பயனற்றது அதில் வெல்ல முடியாது. அது வீண் செலவு, பொருளாதாரம் மற்றும் துறைகளில் பாரதூரமான பக்க விளைவுகளைத் தருவது. இவை எல்லாம் தெரிந்தும், அரசியல் தீர்வு, பேச்சுவார்த்தை என்று வெறும் 'கதை' பேசிக் கொண்டு அரசு யுத்தத்தைத் தொடர்வது, இயன்றவரை தமிழ் மண் அபகரிப்பை அதிகரித்துக் கொள்ளவேயாகும்.

கிழக்கில் மட்டுமல்ல, வடக்கிலும் தமிழ் மண் கபளிகரம் நடந்தாக வேண்டும் என்று அது திட்டமிட்டுள்ளது. வவுனியாவில் அபிவிருத்தி, மக்கள் சேவை என்றெல்லாம் ஆரவாரப்படுத்தப்படுவது அதன் ஆரம்பமே. முதலில் வவுனியா பின்னர் முல்லைத்தீவு அடுத்து மன்னார் என்று வடக்கிலும் சிங்களக் குடியேற்றம் என்னும் காலைப் பதித்துக் கொள்வது அரசின் இலக்காக உள்ளது.

அரசாங்கத்தின் இந்த இலக்கு தமிழர்களுக்கு ஒன்றைப் புகட்டுகிறது. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது சம்பந்தமான எந்த முயற்சியின் போதும் ஏனைய எல்லாவற்றையும் விட குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்; கபளிகரம் செய்யப்பட்ட தமிழ் மண்ணில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்; என்ற இரண்டு அம்சங்களுமே முன்நிறுத்தப்பட வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது.

அதிகாரப்பரவல், சுயாட்சி, அரசமைப்பில் மாற்றம் என்ற இன்னோரன்ன விடயங்களுக்கு முன்பாக குடியேற்ற விவகாரமும், தமிழர் பாதுகாப்புமே முதலுரிமை பெற வேண்டும்.

தமிழர்கள் போராடுவது வெறும் அரசியல், வாழ்க்கை உரிமைகளுக்காக மட்டுமல்ல. அவற்றுக்கு ஆதாரமாகவிளங்கும் மண்ணுக்காகவே என்பதை சிங்கள அரசிடமும், மத்தியஸ்தம் செய்ய வருவோரிடமும் ஆணித்தரமாகக் கூறி வைக்க வேண்டும்.

சில அரசியல் உரிமைகளோடு மட்டும் திருப்திப்படும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை. அவர்கள் தங்கள் பாரம்பரிய பூமியை மீட்பதிலும், பேணுவதிலுமே இலக்காக உள்ளார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மண் இல்லாமல் மனிதன் வாழ முடியுமா? வாழ முடியாதவனுக்கு உரிமை எப்படிக் கிடைக்க முடியும்?

# பிரிட்டனில் "தொங்கு" நாடாளுமன்றம்; கன்சர்வேட்டிவ் பதவி இழக்கும் நிலையில்!

'நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தொட்டில்' என்று கருதப்படும் பிரிட்டனில் சிறுபான்மை அரசாங்கம் ஒன்று பதவிக்கு வரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாளை [09-04-1992] நடைபெறும் பொதுத் தேர்தலில் 650 எம்.பிக்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியோ அல்லது தொழிற் கட்சியோ அறுதிப் பெரும்பான்மையைப் பெறும் நிலையில் இல்லை என்று கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

கன்சர்வேட்டிவா அல்லது தொழிற்கட்சியா அரசு அமைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் மூன்றாவது சக்தியாக லிபரல் ஜனநாயகக்கட்சி இத்தேர்தலில் உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1215 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தை அரசர்களும் மகாராணிகளும் தாம் நினைத்தபடி ஆண்டு வந்தனர்.

அதற்கு எதிராக பிரபுக்கள் புரட்சி நடத்தினர். அதன் பலனாக மக்னா கார்ட்டா (Magna Charta) என்ற சரித்திரப் புகழ் பெற்ற பிரகடனத்தில் 1215 இல் ஜோன் மன்னர் கையெழுத்திட்டார்.

ஜோன் மன்னர் மீது இப் பிரகடனம் திணிக்கப்பட்ட தெனினும், அடிக்கடி இப் பிரகடனம் புதுப்பிக்கப்பட்டு வந்தது.

ஜோன் மன்னரின் மறைவின் பின்னர் மூன்றாவது ஹென்றி மன்னர் இப் பிரகடனத்தை மீண்டும் வெளியிட்டார்.

மக்னா கார்ட்டா சாசனத்தின் மூலமே அரசர்கள் நடத்தி வந்த தன்னிச்சை ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது.

இச் சாசனத்தின் அடிப்படையில் எழுந்ததே இன்றைய இங்கிலாந்தின் அரசியலமைப்பும், அதற்குட்பட்ட முடியாட்சியுமாகும்.

இச் சாசனத்தின் அடிப்படையில் தான் தனிப்பட்ட சுதந்திரங்கள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் சட்டங்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்டு வருகின்றன.

இந்த மக்னா கார்ட்டா சாசனம் தான் இன்று பிரிட்டனின் அரசியலை வழி நடத்துகின்றதே தவிர பிரிட்டனின் அரசியல் யாப்பு அல்ல.

உண்மையில் எழுத்தில் அமைந்த அரசியல் யாப்பு ஒன்று பிரிட்டனிடம் இன்று இடையாது.

எழுத்தில் அரசியல் யாப்பை வைத்துக் கொண்டுள்ள நாடுகளிலும் பார்க்க, எழுத்தில் அரசியல் யாப்பு இல்லாத பிரிட்டனில் அடிப்படை அரசியல் அமைப்பு உரிமைகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன என்று பலரும் கூறுகின்றனர்.

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஜனநாயக வளர்ச்சி ஆகியவற்றைப் பேணுமுகமாக 25 ஐரோப்பிய நாடுகள் கொண்ட கவுன்ஸில் ஒன்று 1949 இல் அமைக்கப்பட்டது.

அந்தக் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் பிரிட்டனிடம் மட்டும் தான் எழுத்திலான அரசியல் யாப்பு கிடையாது.

#### அரசியல் யாப்பு எழுதும் முயற்சி

ஐரோப்பிய நாடுகள் இணைந்த ''ஒரு சமூகம் — ஒரு கரன்ஸி'' என்ற கட்டுப்பாடு உருவாகி வரும் இத் தருணத்தில் பிரிட்டனிடம் எழுத்திலான அரசியல்

**வெளிநாட்டு அரசியல்**

யாப்பு இருக்க வேண்டும் என்ற அவசரதேவை ஏற்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு நவம்பரில் மான்செஸ்டரில் அரசமைப்பு மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

1215 இல் வெளியிடப்பட்ட மக்னா கார்ட்டா, அதில் இருந்து தோன்றிய இன்றைய பிரிட்டிஷ் சட்டங்கள் ஆகியவற்றுக்குப் புறம்பாக நான்கு நகல் எழுத்திலான அரசியல் யாப்புகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

எழுத்திலான அரசியல் யாப்பு ஒன்றை பிரிட்டன் வைத்திருக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக அங்கு பிரபல நீதிமான்கள், சட்டத்துறை வல்லுனர்கள் மத்தியிலும் ஆதரவு ஏற்பட்டு வருகின்றது.

மக்களின் சுதந்திரங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு வரு

### தொழிற் கட்சி தலைமையில் கூட்டு அரசு ஏற்படுமா?

வதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் லிபரல் ஜனநாயகக்கட்சி, எழுத்திலான நகல் அரசியல் யாப்பு ஒன்றை முன் வைத்து பிரசாரத்தை நடத்தி வருகின்றது.

பாரிய அரசமைப்பு சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைத் தொழிற்கட்சி அங்கீகரித்துள்ளது.

ஸ்கொட்லந்து மற்றும் வேல்ஸ் மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை அமுல்படுத்துவது, பிரபுக்கள் சபையை ஒழித்து, தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் கொண்ட மேல் சபை ஒன்றை அமைப்பது, மனித உரிமைகள் சட்ட மூலம் ஒன்றைக் கொண்டு வருவது ஆகியவற்றையும் தொழிற்கட்சி முன் வைத்துள்ளது.

பாரம்பரிய நடைமுறைகளில் கைவைப்பது என்பது பழமைவாதிக் (கன்சர்வேட்டிவ்) கட்சிக்குப் பிடிக்காத காரியம். என்றாலும், 'அரசமைப்புக் குறித்து தீவிர கவனம் செலுத்துவதை எதிர் வரிசையில் உள்ள அரசியல் கட்சிகளிடம் விட்டு விட முடியாது' என்று வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் தனது கட்சியினரிடம் கூறியுள்ளார்.

#### முடியாட்சிக்கு ஆபத்தா?

இதே வேளை — மான்செஸ்டர் மாநாட்டில், தொழிற் கட்சி எம்.பி. ரோனி பென் என்பவரும் எழுத்திலான நகல் அரசமைப்புச் சட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

அதில் முடியாட்சியை ஒழித்து, மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஒருவர் பிரிட்டனின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று திரு. பென் கூறியிருக்கின்றார்.

இரண்டாம் எலிஸபெத் மகாராணி அனைவராலும் விரும்பப்படுபவர். ஆகையால் அவர் தொடர்ந்து பக்கிங்ஹாம் மாளிகையில் வசிக்கலாம் என்பதும் திரு. பென்னின் கருத்து.

எழுத்திலான அரசியல் யாப்பு ஒன்றை பிரிட்டன் பெறுகிறதோ, இல்லையோ அது பற்றி சுவையான வாதம் அங்கு ஆரம்பமாகி விட்டது.

#### நாளைய தேர்தலில் மூன்று கட்சிகள்

இந்த நிலையில் —

நாளைய தேர்தலில் மூன்று பிரதான கட்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

1979 முதல் பதவியில் இருந்து வரும் கன்சர்வேட்டிவ் கட்சி, தனது சரித்திரத்தில் என்றுமில்லாத போட்டியை இத்தேர்தலில் சந்தித்துள்ளது.

மூன்று தேர்தல்களில் அடுத்தடுத்து கன்சர்வேட்டிவ் கட்சிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்த இரும்புச் சீமாட்டி மார்கரட் தாட்சர் 1990 கடைசியில் உட்கட்சிச் சண்டை காரணமாக துரும்பு போல் தூக்கி எறியப்பட்டார். அதன் பின்னர் பிரதமர் பதவியை ஏற்ற திரு. ஜோன்மேஜர் 16 மாதங்களாக கன்சர்வேட்டிவ் கட்சியை வழி நடத்தி வருகின்றார்.

இவரது ஆட்சியில் பொருளாதார மந்தம் பிரிட்டனை வாட்டுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தின் சட்டபூர்வமான ஆயுள் முடிவதற்கு மூன்று மாதங்கள் முன்பதாகவே தேர்தலை நடத்தி தனது தலைவிதியை நிர்ணயிக்க திரு. மேஜர் தீர்மானித்தார்.

1979 தேர்தலில் இருந்து எதிர்க்கட்சியாக இருந்து வரும் தொழிற்கட்சி தனது உட்பூசல்களை ஒதுக்கி வைத்து விட்டு, ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு இன்று செல்வாக்குப் பெற்றுள்ளது.

எட்டு ஆண்டுகளாக தொழிற்கட்சியின் தலைவராக இருக்கும் திரு. நீல் கின்னொக் தனிப்பட்ட ரீதியில் திரு. மேஜரைப் போன்று மக்கள் மததியில் செல்வாக்குப் பெற்றவர் அல்லர்.

இருந்தும் — பதின்மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஒரு கட்சியின் 'ராகத்தை'க் கேட்டு வந்த சலிப்பினால் மக்கள் ஆட்சி மாற்றம் ஒன்றை விரும்புகின்றனர் போல் தெரிகிறது. இதனையே பிரிட்டனில் தினமும் நடத்தப்பட்டு வரும் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

1945 தேர்தலில் கன்சர்வேட்டிவ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலைத் தோற்கடித்த தருணத்தில் தொழிற் கட்சிக்குச் சாதகமாக வீசிய அலை இத்தேர்தலில் வீசுமானால் மட்டுமே தற்போதுள்ள ஆசனங்களுடன் சேர்ந்து மேலும் 102 ஆசனங்களைப் பெற்று அக்கட்சி ஆட்சியைப் பிடிக்க முடியும்.

மூன்றாவது சக்தியாக உருவெடுத்துள்ள லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு, கருத்துக் கணிப்புகளின்படி 20 சதவீத வாக்குகள் கிடைக்கும் நிலை உருவாகி வருகின்றது.

லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவராக இருப்பவரின் பெயர் படி ஆஷ்டவுன் [Paddy Ashdown].

கன்சர்வேட்டிவ், தொழிற் கட்சி ஆகியவற்றின் மீது அதிருப்தி கொண்டவர்கள் தமது கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்றும், அதன் மூலம் பிரிட்டிஷ் அரசியலுக்கு புதிய பரிமாணம் கொடுக்க வேண்டும் என்றும் திரு. ஆஷ்டவுன் கோரியிருக்கின்றார்.

#### கூட்டரசு பற்றி கட்சிகளின் நிலை

பிரிட்டனில் தினமும் நடத்தப்பட்டு வரும் கருத்துக் கணிப்புகளால் வாக்காளர்கள் குழம்பியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதனிடையில் தொழிற் கட்சி, ஆளும் கட்சியிலும் பார்க்க இரண்டு சதவீதத்தினால் முன்னணியில் நிற்கிறது.

தனித்துப் பெரும்பான்மை ஆசனங்களுடன் தொழிற் கட்சி வெற்றி பெற்றாலும் தனித்து அரசு அமைக்க முடியாத நிலை ஏற்படும் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

வாக்காளர் மத்தியில் 20 சதவீத ஆதரவைப் பெறும் என்று [கருத்துக் கணிப்புகளின் படி] எதிர்பார்க்கப்படும் லிபரல் ஜனநாயகக்கட்சி தான் ஆளப்போகும் கட்சியைத் தீர்மானிக்கும் சக்தியைப் பெறப்போகின்றது.

கருத்துக் கணிப்புகள் எப்படி அமைந்திடினும் அறுதிப் பெரும்பான்மை தமக்கே கிடைக்கும் என்று தற்போதைய பிரதமர் மேஜர் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார். அப்படி பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் இன்னொரு கட்சியுடன் சேர்ந்து கூட்டரசு அமைக்கத் தாம் தயார் இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த நிலையில்—தொழிற் கட்சி லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் சேர்ந்து கூட்டரசு

**- தீபன்ராஜா -**

அமைக்கும் வாய்ப்பே அதிகமாக உள்ளது.

நாளைய தேர்தலில் வாக்களிக்க 4 கோடி 30 லட்சம் பேர் தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு 369 எம்.பிக்கள் இருந்தனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி தனது 49 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய திரு ஜோன் மேஜர் தொடர்ச்சியாக நான்காவது தடவையும் கன்சர்வேட்டிவ் ஆட்சியை ஏற்படுத்தி 1822 இல் பிரதமர் லிவர்பூல்பிரபு நிகழ்த்திய சாதனையை முறியடிப்பாரா?

அல்லது 48 வயதான திரு. நீல் கின்னொக் லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து சிறுபான்மை அரசு ஒன்றை அமைப்பாரா?

எது எப்படி அமையினும், பிரிட்டனில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத 'தொங்கு' நாடாளுமன்றம் அமையப் போவது நிச்சயமானதாகும் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. ★

---

### பலாலி...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அருட்செல்வி [வயது 16] என்ற இளம்பெண் காயமடைந்தார். தெல்லிப்பளை கிழக்கு சித்தியம்புளியடி பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது. அவரது வீட்டு முற்றத்தில் விழுந்த ஷெல்லினால் வீட்டில் படுத்திருந்த அவர் காயமுற்றார். [உ-3-15]

### ரஞ்சன்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

குறித்து அரசு நடத்திய விசாரணை பற்றி தமக்குப் பலத்த சந்தேகங்கள் இருப்பதாக திரு. உடுகம்பொல கூறியுள்ளார்.

திரு. விஜேரத்தினாவுக்கு எதிரான சக்திகளைத் தமக்குத் தெரியும் என்றும்—

அந்த அடிப்படையில் அக்கொலை குறித்து தாம் விசாரணை நடத்த முற்பட்டதை அரசாங்கம் தடுத்துவிட்டதாகவும் திரு. உடுகம்பொல குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

திரு. விஜேரத்னாவைத் தாம் படுகொலை செய்யவில்லை எனவும், அரசாங்கம் ஏற்பாடு செய்த படுகொலையே அது எனவும் விடுதலைப் புலிகள் முன்னர் தெரிவித்திருந்தனர் என்றும்—

அக்குற்றச்சாட்டில் உண்மையிருக்குமோ என்ற சந்தேகம், உடுகம்பொலவின் அறிவிப்பை அடுத்து தற்போது எழுந்திருப்பதாகவும் கொழும்பில் சில செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

மக்கள் மத்தியில் இருந்த சந்தேகம் உறுதிசெய்யப்படுவதாகக் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. கே. பி. சில்வா குறிப்பிட்டார். [உ-எ-10]

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். இளையதம்பி இந்து தமிழ் வித்தியாலய தமிழ்த் தினவிழா இன்று புதன் காலை 9 மணிக்கு அதிபர் திரு. மு. செல்லையா தலைமையில் நடைபெறும்.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான உடுவில் பிரதேசமட்ட பரிசளிப்பு விழா இன்று மாலை 6 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. [ஒ]

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் இரண்டு ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் கலைமதி அணியை எதிர்த்து யாழ். சென். அன்ரனிஸ் அணி மோதும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் நக்கீரன் அணியை எதிர்த்து வல்வை அணி மோதும்.

இரு ஆட்டங்களும் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஏககாலத்தில் ஆரம்பமாகும்.

★ ★ ★

விடுதலைப் பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரிவு நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அல்வாய் சிவனத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். சட்டத்தரணி திரு போன். பூலோகசிங்கம் ''ஃபார்க்கால கொள்கை முன்னெடுப்புஇலக்கியங்கள்'' என்ற பொருளில் கருத்துரை வழங்குவார். [த-30]

### உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப். 8

தியாக தீபம் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டினை நினைவு கூருமுகமாக இடம்பெற்று வரும் உண்ணாவிரதமும், கருத்தரங்கும் இன்று கொடிகாமம் வட்டவையில் வரணி, சுட்டிபுரம் அம்மன் கோவிலில் நடைபெறும்.

★ ★ ★

அன்னை பூபதி நான்காவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஸ்ரீ மகாவிஷ்ணு சனசமூக நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ள உண்ணாவிரத நிகழ்ச்சி இன்று நடைபெறும். [த]

### புதுவருட முற்பணம்

யாழ்ப்பாணம் ஏப். 8

லங்கா சிமெந்து லிமிடெட் பணியாளர்களுக்கு புதுவருட முற்பணமும் வழங்கப்பட இருக்கிறது.

தொழிற்சாலை இயங்காவிட்டாலும் ஊழியர்களுக்கு மாதாந்தம் அவர்களின் சம்பளத்தில் 25 சத விதம் வழங்கப்பட்டுவருகிறது. புதுவருட முற்பணம் வழங்கவும் [illegible] அறியவந்தது. [அ]

### உற்சவங்கள்

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும். (ஒ)

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 15 ஆம் திகதி ரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்

★ ★ ★

திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் கோவில் உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது 15 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தமும் இடம்பெறும்

★ ★ ★

சாவகச்சேரி பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்

★ ★ ★

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் ஸ்ரீ ராம நவமி உற்சவம் முதல் தடவையாக எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

★ ★ ★

மல்லாகம் அருள்மிகு வீரபத்திரர் ஆலய மஹாசங்காபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது அன்னதானமும் இடம்பெறும் (ஒ)

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை மேற்கு ஸ்ரீ அங்குசபாசப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோல வருஷாபிஷேக திருவிழா இன்று புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

★ ★ ★

புலோலி மேற்கு வாணர் குடியிருப்பு ஸ்ரீ முத்துமாரி அம்மாள் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளது. [உ-165]

### தென்மராட்சியில் திருட்டுகள்

ஹெலி தாக்குதல் நடத்திய சமயம் பதுங்கு குழிக்குள் வீட்டுக்காரர் இருந்த வேளையில் அவ் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் நகைகள் உட்பட 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த திங்கட்கிழமை இரவு கொடிகாமம், கச்சாய் தெற்கில் இச் சம்பவம் இடம்பெற்றது. [ஒ-117]

★ ★ ★

மிருசுவில் சந்தியிலுள்ள ஒரு கடையிலும் கடந்த சனியன்று இரவு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடையின் கதவுப் பூட்டு உடைக்கப்பட்டு ரொக்கப் பணம் உட்பட பல ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் சூறையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

### நம்பிக்கை நிதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 8

உப்புக் கூட்டுத்தாபன வடபிராந்திய ஊழியர்களின் ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி அளித்துள்ளன.

இக்கொடுப்பனவுகளை ஊழியர்களுக்கு நாளையும் வெள்ளிக்கிழமையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது [அ]

### ஊர்காவற்றுறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிலை கொண்டபோது 500க்கும் குறைவான மக்களே காணப்பட்டனர். ஏனைய மக்கள் அனைவரும் அருகிலுள்ள, இன்னமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவிட்டனர்.

ஊர்காவற்றுறையில் இன்னமும் தங்கியுள்ள ஒரு சிலரில் பெரும்பாலானவர்கள் முதியவர்கள். இவர்களில் பலரும் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்வதற்காக யாழ்ப்பாணம் செல்ல விரும்புகின்றனர் அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

#### முகாம்களில்

இராணுவம் முன்னரிலும் பார்க்க இப்போது மக்களுடன் நன்கு பழகுவதாகவும் உணவுப் பாருள்கள் தாராளமாகக் கிடைப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் ஊர்காவற்றுறையில் தங்கியிருக்கும் மக்களில் பெரும்பாலானோர் அரசுடன் சேர்ந்து செயற்படும் தமிழ்க்குழுவான ஈ. பி. டி. பி.யினால் நடத்தப்படும் முகாம்களில் தங்கியிருக்கின்றனர். தத்தம் வீடுகளுக்குத் திரும்ப தாம் அனுமதிக்கப்படுவதில்லை என இவர்கள் கூறுகின்றனர். தமக்கு வரும் கடிதங்கள் அனைத்தும் பிரித்துப் பார்க்கப் படுவதாகவும், தாங்கள் சுதந்திரமாக நடமாட முடியாதென்றும் இந்த மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.— என்பதாகும். [அ-10]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். வண்ணை மேற்கு
ஸ்ரீ அங்குசபாசப் பிள்ளையார் கோவில்
(இரிப் பிள்ளையார்)
08 — 04 — 1992 புதன்கிழமை

## மணவாளக்கோல வருஷாபிஷேக திருவிழா

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை 9-00 மணி | — | சங்காபிஷேகம் |
| பகல் 12-00 மணி | — | விசேட பூசை |
| மாலை 3-00 மணி | — | விசேட மங்கள இசை |
| மாலை 5-00 மணி | — | ஊஞ்சல் |
| மாலை 6-00 மணி | — | விநாயகப் பெருமான் திருப்பூந் தண்டிகையில் வீதி உலா வருதல் |

விசேட மங்கள இசை வழங்குவோர்

★ அளவையூர் பத்மநாதன் குழுவினர்
★ அளவையூர் சிதம்பரநாதன் குழுவினர்
★ யாழ். முருகதாஸ் குழுவினர்

[சி-1839]

## மே தினப் போட்டிகள்

எதிர்வரும் தொழிலாளர் தினமான மேதினத்தை முன்னிட்டு தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பிரிவான பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைமையில் பின்வரும் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1. பனையேறல்
2. குட்டான் இழைத்தல்
3. கிடுகு பின்னல்

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 11 - 4 - 92 இற்கு முன் அயலிலுள்ள தெ. ப. பொ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வெற்றி பெறுவோர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

பனை, தென்னை வள
அபிவிருத்தி ஒன்றியம்.

(சி/1775)

"*Practice Makes one Perfect*"

## O/L - 1992 பரீட்சைக்கான

கணிதம், விஞ்ஞானம், தமிழ்,
சமூகக்கல்வி, ஆங்கிலம்
ஆகிய பாடங்களுக்கான

மாதாந்த
பயிற்சிப் பரீட்சைகள்

ஆரம்பம்: 09-04-1992

| | | |
|---|---|---|
| ★ Bond Institutes | — | யாழ்ப்பாணம் |
| ★ Selin | — | கோப்பாய் |
| ★ Pearl Institute | — | நீர்வேலி |
| ★ Kugan Institute | — | ஆவரங்கால் |
| ★ Satha Pens | — | வடமராட்சி |
| ★ Brilliant | — | தென்மராட்சி |
| ★ Vinyls | — | சுன்னாகம் |
| ★ Vinayahar | — | ஆனைக்கோட்டை |
| ★ Paarathy | — | சித்தன்கேணி |
| ★ National Academy | — | பண்டத்தரிப்பு |

மேலதிக விவரங்களுக்கு;
EXAMINATION UINT,
**BOND INSTITUTES,**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4631)

கறுப்புப் .
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீ. ல. சு. கட்சி கருதுகிறது.

அரசுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்ட பிரேமதாஸ உடுகம்பொல, அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை வெளியிட்டிருப்பதைப் பயன்படுத்தி, ஐ. தே. க. அரசுக்கு பெரும் அரசியல் நெருக்கடி ஒன்றை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டு முன்னிற்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பிரேமதாஸ உடுகம்பொல வெளியிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவரிடமிருந்து மேலதிக விளக்கங்கள், சான்றுகள் ஆகியவற்றைப் பெற்று அவற்றை நாடாளுமன்றத்தின் முன் பகிரங்கப்படுத்தவும் எதிர்க்கட்சிகள் முயற்சிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ]

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை

முழுநேரக் கல்விப்
பட்டப்பின்
டிப்புளோமா கற்கை
நெறி 1991 / 92
புதிய அனுமதி

பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வுநாடிகள் 1992-05-15 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், நிதிக் கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக் கிளையில் சிரேட்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1992-06-21 அன்று பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களைச் சிரேட்ட உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1992-05-15 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
1992 04-07.

[C/1784]

பிரத்தியேக வகுப்பு
N.C.E., Follow Me, TOEFL
வகுப்புகள்
10-04-1992 வெள்ளிக்கிழமை பி. ப. 4-30 மணிக்கு ஆரம்பம்.
சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.
ஆசிரியர்:- தெய்வதவபாலன். [20393]

உ
மல்லாகம் அருள்மிகு வீரபத்திரர் ஆலய

## மஹா சங்காபிஷேக நிகழ்ச்சிகள்

இன்று — புதன்கிழமை 08 — 04 — 92
பகல் மஹா சங்காபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும்.

இரவு 8-00 மணிக்கு **பட்டிமண்டபம்**

" தன்னலமற்ற தம்பியர் வாய்த்தது தருமனுக்கே ! இராமனுக்கே !! "

| தருமனுக்கே என | இராமனுக்கே என |
|---|---|
| இரா. செல்வவடிவேல் | புலவர் ஈழத்து சிவானந்தன் |
| த. சிவகுமாரன் | திரு. திருநந்தகுமார் |
| க. குமாரதாசன் | ஆறு. திருமுருகன் |

நடுவர் : இ. ஜெயராஜ் (கம்பன் கழக அமைப்பாளர்)

இரவு 10-30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி
ஈழநல்லூர் ★ அருணா குழுவினர் ★

— தொண்டர் சபையினர்
மல்லாகம். [20387]

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ நல்லைக் குருமணி
அவர்களின்

## 11 ஆவது ஆண்டு ஆராதனை விழா

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூசை நாளை வியாழக்கிழமை பங்குனி 27 ஆம் திகதி நல்லூர் ஆதீனத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்
(காலை நிகழ்ச்சிகள் குருமுகூர்த்த ஆலயத்தில் நடைபெறும்)

8-00 மணி : யாகபூசை, விசேட ஹோமம்
11-00 மணி: சங்காபிஷேகம், பஞ்சமுகார்ச்சனை திருமுறை அர்ச்சனை, திருமுறை பாராயணம்

நண்பகல்
12-00 மணி: மகேஸ்வரபூசை

பிற்பகல்
2-00 மணி: பெரியபுராணபடலம்
3 00 மணி: இசையரங்கு
பண்ணிசை, இன்னிசை
(பல இசைக்கலைஞர்கள் பங்கு கொள்ளுவர்)

மாலை
6-00 மணி: நாடகம் பக்தநந்தனார்
[கம்பன் கழக நாடகக் கலைஞர்கள் வழங்குவது]

(C 1779)

சாவகச்சேரி — நகராட்சி மன்றம்

## முக்கிய அறிவித்தல்

### கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்தல்

சாவகச்சேரி நகரசபையின் நிர்வாக பிரதேச எல்லைக்குள் உள்ளவர்கள் தங்கள் நாய்களை கட்டி வளர்க்க வேண்டுமென்பதையும், கட்டாக்காலியாக வீதிகளில், ஒழுங்கைகளில், பொது இடங்களில் திரியும் நாய்கள், இதற்கென இச் சபையால் நியமிக்கப்பட்ட ஊழியர்களால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
06-04-1992.

(சி/1785)

## COMPUTER PROGRAMMER

We are in the process of computerising our Accounts and are looking for a competent Computer Programmer.

If you possess the knowledge to work on D Base III+, Lotus 123 & Wordstar 2000+ and feel you are the right candidate, please walk in for an Interview between 9 a. m. and 12 noon on 8th 9th and 10th of April 1992.

Frevious experience will be an added advantage.

**NEW UTHAYAN PUBLICATIONS (Pvt.) LTD.,**
15, 2nd LANE, POWER HOUSE ROAD,
JAFFNA.

(C-1816)

அகதிகளுக்கு எதிரான

## தீவிர வலதுசாரிகளுக்கு ஆதரவு அதிகரிக்கிறது

பொன், ஏப். 8

ஐக்கிய ஜேர்மனியில் கடந்த வார இறுதியில் பிராந்திய சபைகளுக்கு நடந்த தேர்தலில் வெளிநாட்டாருக்கு அரசியல் தஞ்சம் வழங்கும் கொள்கையைக் கடுமையாக எதிர்க்கும் இரண்டு தீவிர வலது சாரிக் கட்சிகள் அதிக வாக்குகளை பெற்றன.

இது ஜேர்மனியின் இரண்டு பிரதான கட்சிகளான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி மற்றும் சமூக ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் மத்தியில் பலத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ள வெளிநாட்டு அகதிகளை வெளியேற்ற வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வரும் குடியரசுக் கட்சி 11 சத வீதமான வாக்குகளைப் பெற்றுள்ளது. இன்னொரு தீவிரவாதக் கட்சியான ஜனநாயக மக்கள் யூனியன் 6 சத வீதமான வாக்குகளைப் பெற்றது.

ஜேர்மன் பிரதமர் திரு. ஹெல்மட் கோலின் சொந்த மாநிலத்தில், இக்கட்சிகளுக்குக் கூடுதலான வாக்குகள் கிடைத்தன.

இதனைத் தொடர்ந்து ஜேர்மன் நாட்டினுள் அகதிகளாக வருபவர்களைத் தடுத்து நிறுத்தக் கூடியதான கடும் சட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கை ஜேர்மன் அரசின் அரசியல் நடவடிக்கைகளில் முதலிடத்தை பெற்றிருப்பதாக பி. பி. ஸி வானொலி அறிவித்தது.

ஜேர்மனியில் வெளிநாடுகளைச் சேர்ந்த அகதிகள் தங்கியிருக்கும் முகாம்கள் மீது தீவிரவாதக் குழுக்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருவது தெரிந்ததே.

[இ-எ]

### வெளிவாரி பட்டப்படிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8

1991 - 92ஆம் ஆண்டில் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இம்மாதத்தில் கோரப்பட உள்ளன.

முதற்கலை, முதல் வர்த்தகம் ஆகிய நெறிகளோடு பொதுக்கலைமாணி [பகுதி 1] சிறப்புக் கலைமாணி [பகுதி 1] வர்த்தகமாணி [2ஆம் ஆண்டு] ஆகிய கல்வி நெறிகளுக்கும் இம்முறை விண்ணப்பங்கள் கோரப்படும் என்று வெளிவாரிப் பட்டப்படிப்பு இணைப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

[அ]

### டாக்டர் ஹனிமனின் பிறந்த நாள் விழா

யாழ்ப்பாணம், ஏப். 8

சாயி ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி மாணவர்களும், பதிவு செய்த ஹோமியோபதி வைத்தியர்களின் சங்கமும் இணைந்து நடத்தும், ஹோமியோபதியின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமனின் பிறந்த நாள் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்குசாயி ஹோமியோபதி வைத்தியர் கல்லூரியில் நடைபெறும்.

[த]

### கடை உடைத்து திருட்டு

நெல்லியடி, ஏப். 8

கரணவாய் வடக்கு, குஞ்சர் கடைச் சந்தியிலுள்ள பலசரக்குக் கடை ஒன்று, கடந்த திங்கள் இரவு, கதவு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரொக்கப் பணம் உட்பட பொருள்கள் பலவும் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்
30—11—1937
★
மறைவு
21—3—1991

வேலணை கிழக்கு
**மங்கையர்க்கரசி சண்முகநாதன்**

பாயிற் படுத்துப் பரமபதம் அடைவதும்
நோயிற் படுவதுவும் நுகர்வேதான் — ஆனாலும்
ஆய பிறவிகளும் ஆபத்தாய்க் கூற்றுவனாய்
நோயாய் இருப்பதுதான் நோ.

சகோதரன், சகோதரி
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

181, கோவில் வீதி
நல்லூர். [20392]

## மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் துரையப்பா**
(இளந்தென்றல் கபே, புளியங்கூடல்)

சுப்பிரமணியம் துரையப்பா 7-4-1992 இல் காலமானார்.

இவர் காலம்சென்ற பாக்கியலெட்சுமியின் அன்புக் கணவரும், காலம்சென்ற இராசையா, காலம்சென்ற பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகேஸ்வரி, காலம்சென்ற சொர்ணேஸ்வரி, சிறீகுமாரன், வஸ்ரேஸ்வரி, சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவரெத்தினம், காலம் சென்ற சபாநாதன், கோடீஸ்வரன், கலா, கோமதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
து. சிறீகுமாரன் [மகன்]

வெள்ளைப்பிள்ளையார் கோயிலடி,
செங்குந்தா வீதி.
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

[20394]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**
பிரிவு - 2 DAY CLASSES (8 - 3)
பிரிவு - 3 EVENING CLASSES (3-6)
பிரிவு - 2 SAT., SUN. CLASSES (8 3)

ஆரம்பம்: 16 — 04 — 1992

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J. R. சூரி |
| கணிதம் | — | திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — | திரு விஸ்வநாதன் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | — | திரு. கோபி |
| தமிழ் | — | திரு. சிவா |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன், திரு. கோபி |
| சமயம் | — | திரு.சங்கர் |

மு. குறிப்பு:
★ கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி-1835]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்( பிறைவேட் ) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 8 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org